இன்றுமுதல் சக்சஸ்



1 வாழ்க்கையில் அபாரமான வெற்றிகளை அடைந்து அவற்றைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிற மனிதர்களையெல்லாம் அண்ணாந்து பார்க்கிற இந்த உலகம், மிகச் சுலபமாக, மேலோட்டமான சில விமரிசனங்களைச் செய்து விட்டுத் தன் முகத்தை வேறு திசைக்குத் திருப்பிக் கொண்டு விடுகிறது.

"எல்லாம் நேரம்;" "அதிர்ஷ்டம் பண்ணினவரு;" "உடம்பெல்லாம் மச்சம் அவருக்கு" என்றெல்லாம் மிகமிகச் சாதாரணமான காரணங்களைச் சொல்லிவிட்டு அடுத்த விஷயத்திற்குத் தாவி விடுகிறது.

இது தவறு.

வெற்றி பெற்றவர்களின் வரலாறுகள் மிக ஆழமாக ஆராயப்பட வேண்டியவை. பில்கேட்ஸையும், அம்பானியையும் விடுங்க உங்கள் வட்டத்தில் அண்மைக் காலத்தில்

இதுதான் 'உழை உழை' என்று உற்சாகப்படுத்திக் கொண்டே இருக்கிறது.

"அடப் போங்க சார்! எனக்குக் கூடத்தான் வாழ்வில் உயரவேண்டும் என்ற எண்ணம் எவ்வளவோ இருக்கு. பல வருஷமா உழைக்கிறேன். அப்படியேதான் இருக்கிறேன். ஜாண் ஏறினால் முழம் அல்லவா சறுக்குது!" என்று மனம் சலித்துப் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள்.

இவர்களுக்கெல்லாம் ஒன்றே ஒன்றுதான் சொல்வேன்.

"சாரி. உங்கள் எண்ணங்களில் வலிமையோ வீரியமோ இல்லை. அதில் முழுமையும் இல்லை."

கிளட்சை அழுத்தியாயிற்று. கியரைப் போட்டாயிற்று. ஆக்ஸெலரேட்டரையும் கொடுத்தாயிற்று. வண்டி நகரவேயில்லை என்று புலம்புகிறவர்களுக்கு ஒரு வார்த்தை.

"நீங்கள் இன்னும் கிளட்ச்சை ரிலீஸ் பண்ணவே இல்லை!"

பலர் இப்படித்தான். ஏதோ ஒன்றை அழுத்திப் பிடித்துக் கொண்டு "நான் நகரவே முடியவில்லையே" எனறு அங்கலாய்க்கிறார்கள்.

உங்களை இழுத்துப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் கயிறுகளை அடையாளம் காணுங்கள். அவற்றை அறுத்து எறியுங்கள். அப்புறம் பாருங்களேன் நடக்கிற அதிசயங்களை!

ஒரு தாய் நான்கு பிள்ளைகளைப் பெற்றிருக்கிறாள் (அந்தக் காலத்துத் தாய்) என்று வைத்துக் கொள்வோம்

சாதாரண வெற்றி முதல் மகத்தான வெற்றிகள் வரை பல்வேறு விதமான வெற்றிகளை அடைந்தவர்களின் பின்னணிகளைக் கொஞ்சம் அலசிப் பாருங்கள்.

(இவர்களை நினைத்துக் 'கபகப' என்று வயிறு எரிந்து போவதுதான் பலரது பிறவிக் குணமாக இருக்கிறது).

முதலில் இவர்களை நாம் வியக்க ஆரம்பிக்க வேண்டும். அப்படி ஆரம்பித்தால்தான் இவர்கள் மீது நமக்கு விருப்பம் வரும். அந்த விருப்ப உணர்வு இவர்களுக்கும் நமக்கும் இடையே இருக்கும் இரும்புத் திரையை உடைத்து எறியும்.

வெற்றியாளர்களை உன்னிப்பாகக் கவனித்தால் இவர்கள் அனைவரிடமும் ஒரு பொதுவான அடிப்படைக் குணம் இருப்பதை உணர முடியும்.

அது, உயரவேண்டும் என்கிற உந்துதல்; எப்படியாவது முன்னுக்கு வரவேண்டும் என்கிற வேகம், சாதிக்க வேண்டும் என்கிற தாகம் போன்றவற்றை உள்ளடக்கிய இந்த எண்ணம்தான் ராணித் தேனீயைப் போல் மனக் கூட்டிற்குள் உட்கார்ந்து கொண்டு இலட்சக் கணக்கான முட்டைகளை உற்பத்தி செய்து கொண்டே இருக்கிறது.

இதே எண்ணம்தான் உள்ளுக்குள் புதைந்து கிடக்கும் மகத்தான ஆற்றல்களை வெளிக் கொணர்கிறது. ஒருவனைத் தூங்கவிடாமல் புரட்டிப் புரட்டி எடுப்பதும் இத்தகைய எண்ணம்தான்.

மூவருக்கும் கப் அண்ட் சாசரில் பால் வந்தது. (காப்பி), டீ, சாப்பிடும் பழக்கமில்லை) அந்த கப் அண்ட் சாசரில் ஸ்பூன் இருந்தது. நான் விலைப் பட்டியலைப் பார்த்தபடி, ஸ்பூனை எடுத்துக் கீழே வைத்து விட்டுப் பாலை அருந்தத் தொடங்கினேன். அதில் இனிப்பு இல்லை.

என் மகனிடம் சொல்லி, சர்க்கரை கொண்டு வரச் சொன்னேன்.

"இல்லப்பா. சாசரில் ஸ்பூன் இருந்தாலே சர்க்கரை அடியில் இருக்குன்னு அர்த்தம். நாமதான் கலக்கிக்கணும். அதுக்குத்தான் ஸ்பூன் வச்சிருக்காங்க."

ஒரு மின்னல் வெட்டியதைப் போல் இருந்தது எனக்கு. 'இவன் பொழச்சுக்குவான்' என்று தோன்றியது.

பலரது வாழ்க்கை நிலைமை இப்படிப்பட்டதுதான்.

பால் இருக்கிறது. கப் இருக்கிறது. சர்க்கரை இருக்கிறது. கலக்க ஸ்பூன் கூட இருக்கிறது. ஆனால் மேலோட்டமாகக் குடித்துவிட்டுப் பால் இனிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

இப்போது உங்களுக்கு ஓர் உண்மை பிடி பட்டிருக்குமே!

கரெக்ட்!

எண்ணம் இருக்கிறது. சூழ்நிலைகளும் வாய்ப்பு களும் இருக்கின்றன. ஆனால், இரண்டும் கலக்கப்பட வே யில்லை.

உங்களுடைய எண்ணங்களுக்கு நீங்கள் மதிப்பளிக்க வேண்டும். பார்க்கப்போனால் பலருக்கும் பணப்

அவர்களது குடும்பச் சூழல் என்னவோ அனைவருக்கும் ஒரே மாதிரிதான்.

ஆனால் அப்பிள்ளைகளுள் ஒருவர் மட்டும் பெரிதாகத் தலையெடுக்கிறார் அபாரமாக வளர்கிறார். அக் குடும்பத்தின் சூழ்நிலையையே மாற்றுகிறார். பெற்ற தாய் தந்தையின் பொருளாதாரச் சூழ்நிலையை எங்கோ உயர்த்துகிறார். கொஞ்சம் பெருந்தன்மையானவராக இருந்தால் தன் உடன் பிறப்புகளையும் எங்கோ கொண்டு போய் வைக்கிறார்.

இந்த மகனின் அம்மாவைக் கேட்டால் சொல்வார்.

"அவன் சின்ன வயசுலேர்ந்தே இப்படித்தாங்க... இவன் பிரமாதமா வருவான்னு எனக்கு அப்பவே தெரியும்!"

நன்கு முன்னுக்கு வரவேண்டும், இந்தக் குடும்பத்தின் வறுமைச் சூழலை மாற்ற வேண்டும் என்பதை வெறும் எண்ணமாக மட்டுமல்ல. இரத்தத்தின் அணுக்களாகவே மாற்றிக் கொண்டு விட்டால் அந்த மனிதன் வெற்றி பெற்றே தீருவான்.

கொஞ்சம் சுயபுராணம் பாட அனுமதியுங்கள்.

அமெரிக்காவில் இப்போது எம்.எஸ். படித்தபடி பணி புரிந்து கொண்டிருக்கும் என் மகன் அரசு ராமநாதன், சிறுவனாக இருந்த போது நடந்த ஒரு சம்பவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விருப்பம்.

நானும் என் மனைவியும் அரசுவுமாய் ஓர் ஓட்டலுக்குப் போயிருந்தோம். நான் ஓட்டலின் விலைப் பட்டியலை சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

பிரச்னையைவிட திட்டப் பிரச்னைதான். அதிகம் சரியான திட்டங்கள் இருந்துவிட்டால் அது பணத்தைத் தன்னால் கொண்டு சேர்த்துவிடும்,

நம்முடைய சிந்தனையில் உருவாகும் திட்டத்தை நாம் எப்படி நிர்வகிக்கப்போகிறோம் என்பது முக்கியம்.

சாத்தியமற்றவற்றைச் சிந்திக்கிறவருக்கு எண்ணற்ற திட்டங்கள் தோன்றும். ஆனால் கருத்தில்லாமல், சிரத்தையில்லாமல் காற்றில் விட்டுவிடுவார்கள். காரணம் அவரிடம் நம்பிக்கையூட்டும் எண்ணங்களோ, நம்பிக்கையான மனோபாவமோ இருப்பதில்லை.

'தரமான விதை':

சிந்திப்பவருக்குத் தெரியும், ஒரு சிறிய எண்ணப் பொறி மாபெரும் கண்டுபிடிப்புக்கு வழிவகுத்துவிடும் என்பது. அந்தக் கண்டுபிடிப்பு பல லட்சங்களைக் கொட்டிக் குவிக்கும், அவருடைய வாழ்க்கை முறையையே மாற்றிவிடும்.

நல்ல திட்டங்கள் தரமான விதை மாதிரி. தரமுள்ள விதைகள் உற்பத்தியைப் பெருக்கும் என்பது ஒரு விவசாயிக்குத் தெரியும். அவர் விதைகளைக் கவனமுடன் தேர்ந்தெடுத்து விதை நேர்த்தி செய்வார். வெற்றியை ஈட்ட விரும்பு கிறவரும் தமது எண்ணங்களை அவ்வாறே நேர்த்தி செய்ய வேண்டும்.

நல்ல திட்டங்களை ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி ஒதுக்கிவிடக் கூடாது.

'அதைச் செய்யமுடியாது', 'அதைச் செய்வதற்குத் தேயானவை நம்மிடமில்லை', அது ரொம்ப ரிஸ்க்,

சாதக, பாதகங்களை ஆராய்வது, எதிர்பாராமல் நேரக் கூடியவற்றை எப்படிச் சமாளிப்பது, திட்டத்துக்கான முதலீடுகளைத் திரட்டுவது, செயலாற்றுவதற்கு உரிய நபர்களைத் தேர்ந்தெடுப்பது, அவர்களிடம் பொறுப்பு களை ஒப்படைப்பது என்று உடலுழைப்பும், மூளை உழைப்பும் நன்கு தேவைப்படும்.

முதலில் எண்ணங்களைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். அதைச் செயல்படுத்துவதற்கான சாத்தியங் களைக் கண்டறிய வேண்டும். அது நமது இரசனைக்குப் பொருந்துமா (ஈடுபாட்டுடன் செய்கிற காரியம் நேர்த்தியாக அமையும்) என்பது முக்கியம். இல்லையேல் அரைகுறையாக விடும்படி ஆகும். ரசனையைப் போலவே திறமையும், போதிய தொழில் நுட்ப அறிவும் அவசியம்.

ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள், எண்ணமே அனைத்திற்கும் மூலம். அடுத்து அதில் நம்பிக்கை வேண்டும். தன்மீது நம்பிக்கை; தான்கொண்ட எண்ணத்தின் மீது நம்பிக்கையும் தலையாய உந்து சக்திகள்.

உந்து சக்திகளில் பிரதானமானது தன்னம்பிக்கை. எதைக் கண்டும் மலைக்க வேண்டியதில்லை.

நம்பிக்கை என்பது ஓர் ஊற்றாகச் சுரக்க வேண்டும். அது ஒருபோதும் வற்றிப்போக விடக்கூடாது. நம்பிக்கையில் தான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது, இத்தகைய மனிதர்கள்தாம் தாக்குப்பிடிக்கிறார்கள், இவர்களுக்குத் தான் வாழ்க்கை வெற்றிகரமாக நடக்கிறது.

உங்கள் எண்ணத்தோடு நம்பிக்கையை இணைத்துக் கொள்ளுங்கள்.

என்னமோ எனக்குப் பிடிக்கலை, முன்னாடியே நிறைய பேர் செஞ்சிட்டிருக்காங்க, யாருமே செய்யாததை நாம செய்ய நினைச்சா அது முட்டாள்தனம்... இப்படியான சமாதான வார்த்தைகளை விட்டொழிக்கவேண்டும். வளர்வதில் உண்மையான ஆர்வம் இல்லாதவர்கள் சொல்லும் வார்த்தைகள் இவை.

'எப்படியும் உயர வேண்டும்' என்று நினைப்பவர் ஒருபோதும் இத்தகைய சாக்கு போக்குகளைச் சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்.

பல பேருக்கு எண்ணங்களில் பஞ்சமில்லை, குற்றால அருவி மாதிரி வந்து கொட்டும், ஆனால் எதைத் தெரிவு செய்வது என்று தெரியாமல் திண்டாடிப் போவார்கள்.

எண்ணத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதிலும் அவர்களுக்குப் பிரச்னை. இது 'ஓர்க்அவுட்' ஆகுமா என்கிற சந்தேகம். தொழில் தொடங்குகிறேன் பேர்வழி என்று முதலீடு செய்துவிட்டு நாளை மீட்டெடுக்க முடியுமா என்கிற தயக்கம், எதிர்பாராமல் இழப்பு, தோல்வி, சரிவு ஏற்பட்டால் எப்படி எதிர்கொள்வது என்கிற அச்சந்தான் இவர்களிடம் அதிகம்.

வித்தியாசமான சிந்தனையிருந்தும் நிறையப் பேர் முன்னுக்கு வர முடியாமல் போனதற்கு இதுதான் காரணம்.

எண்ணுவது எளிது. எண்ணத்துக்கும் செயலுக்கும் உள்ள இடைவெளியை இட்டும் நிரப்பும் வேலைதான் கடினமானது. எண்ணத்தை இலக்காக மாற்றுவது அந்த இலக்கை அடையத் திட்டமிடுவது, திட்டத்தில் உள்ள

வெற்றி பெறுகிற விரும்புகிறவர் தன்மீது நம்பிக்கை வைத்தால் மட்டும் போதாது, அடுத்தவர் மீதும் நம்பிக்கை வைக்க வேண்டும்.

தெரு முனையில் 'அண்ணாச்சி' கடை வைத்திருக்கிறார். பார்க்கத்தான் சிறிதாக இருக்கிறது. எந்தப் பொருளைக் கேட்டாலும் இல்லையென்ற பேச்சு கிடையாது. 'என்ன சார் தயக்கம், உங்களுக்கு வேணும் கறதை வாங்கிக்குங்க. சம்பளம் வந்தா கொடுத்திடப் போறீங்க' என்பார். இரண்டு மாசத்துக்கும் இரண்டாயிரம் கொடுபடாமல் நிற்கும். ஆனாலும் அவர் உங்களை நம்புகிறார். உங்களை மாதிரிக் கடன் வாங்கிப்போகிற அத்தனை பேரையும் நம்புகிறார். பத்துப்பேரில் ஒருவர் ஏமாற்றலாம். ஆனால், 'தகுதியான வாடிக்கையாளர்கள், முதலுக்கு மோசம் வராது' என்று நம்பிக்கையோடு பற்று வரவு செய்கிறார்.

பெரிய தொழில்களிலும் அப்படித்தான். வெற்றிகரமான தொழிலதிபர்களைப் பாருங்கள். ஒருவர் தான் செய்து கொண்டிருக்கும் தொழில் தொடர்பான பல தொழில்களை அடுத்தடுத்து தொடங்குவார். இன்னொருவர் தொடக்கத்தில் பெரிய பஸ் முதலாளி, அடுத்து சர்க்கரை ஆலை, நட்சத்திர ஓட்டல், துணி ஆலை என்று வெவ்வேறு தொழில்களைத் தொடங்குவார். நீங்கள் நினைக்கலாம் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத தொழில்களாயிற்றே, அவர் எப்படி வெற்றி பெற முடியும் என்று.

எல்லாத் தொழில்களுக்கும் நிர்வாகத்திறன் உள்ளிட்ட சில அடிப்படைகள் பொதுவானவை.

அவர்கள் அவ்விதம் தங்களை நிலைநிறுத்திக் கொள்கிறார்கள், அபிவிருத்தி செய்து கொள்கிறார்கள்.

கொஞ்சம் நிதானித்தீர்களானால் புரியும், தன்னம்பிக்கை, தான் செய்கிற செயலில் நம்பிக்கை, தனக்காகச் செயல்படுகிற மனிதர்களிடம் நம்பிக்கை... அவர்களுடைய உலகம் இப்படித்தான் விரிகிறது.

உயரவேண்டும் என்கிற எண்ணம், எதையும் சமாளிக்கிற ஆற்றல், தளராத நம்பிக்கை வேறென்ன வேண்டும் குறுகிய காலத்தில் வெற்றி பெறுவதற்கு?

மாவீரன் அலக்சாண்டர் சொன்னார் 'நானல்லவோ சந்தர்ப்பங்களை உண்டுபண்ணுகிறேன்' என்று.

பலகீனர்கள் காத்திருக்கிறார்கள், பலசாலிகள் உருவாக்குகிறார்கள்.

உரியவர்கள் தங்களது கைகளை அரைவாசி நீட்டினாலும் கெட்டிக்காரர்கள் அதைப்பற்றிக் கொண்டுவிடுவார்கள் 'அதுவே மாபெரும் சந்தர்ப்பம்' என்று.

முன்னேறத் துடிப்பவருக்கு ஆயிரம் வாய்ப்புகள். கிடைக்கிற முதல் வாய்ப்பைப் பற்றிக் கொள்ள வேண்டும், அது எத்தனை சிறியதாயினும். அதுதான் முக்கியம்.

எனது நண்பரொருவரின் மகன் பி.காம் படித்திருந்தார். இன்னும் இரண்டு நண்பர்களுடன் சேர்ந்து ரவா, மைதா ஆலை ஒன்றின் அதிபரை அணுகினார். 'உங்கள் பொருட்களின் விற்பனையை நாங்கள் அதிகரிக்கிறோம். உங்களுக்கு எங்கள் மீது

நம்பிக்கை இருந்தால் சரக்குக் கொடுங்க' என்று கேட்டார். முன்வைப்புத் தொகை செலுத்த போதிய பணமில்லை. ஆனாலும், அந்த ஆலைமுதலாளி அந்த இளைஞர்களை நம்பிச் சரக்குக் கொடுத்தார்.

அவர்கள் தங்களுக்குத் தெரிந்தவர்களிடமிருந்து சிறுதொகையைப் புரட்டி மூன்று சக்கர இன்ஜின் பொருத்தப்பட்ட வண்டி ஒன்றை வாங்கினார்கள். ரவா, மைதா மூட்டைகளுக்கு ஒரு நண்பன்வீட்டு முன்புற ஹாலின் ஒரு மூலைதான் 'குடோன்'. அவர்கள் தாங்கள் வசிக்கும் பகுதி, சுற்றிலுமுள்ள பகுதிகளை ஆளுக்கொரு 'ஏரியா' வாகப் பிரித்துக் கொண்டார்கள்.

சற்றும் மனம் தளராமல் கடைகள் தோறும் அலைந்து 'ஆர்டர்' பிடித்தார்கள். தொடக்கத்தில் 'போ... போ. பிசினஸ் நடக்கிற நேரத்தில் தொல்லை பண்ணாதே' என்று கடைக்காரர்கள் சிலர் அலட்சியப்படுத்தினார்கள். ஆனாலும் அவர்கள் அயராமல் முயன்றனர்.

கூடவே பிஸ்கட் கம்பெனி ஒன்றின் தயாரிப்புகளையும் மார்க்கட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். அதற்காக தனி அலைச்சல் இல்லைதானே!

இந்த வேலையில் கணிசமான பணம் கிடைத்தது. ஏஜன்சிக்கென்று தனியிடம் பார்த்து போர்டு மாட்டினார்கள். அதிக அளவில் சரக்குகளை அங்கே வைத்துக் கொள்ள முடிந்தது. கணக்கு வழக்குகளைக் கவனிக்க ஒரு கணக்காளர், ஒரு வரவேற்பாளினி, 'டெலிவரி வேன்' என்று வளர்ந்தார்கள்.

'ஒரு என்.பி.ஏ வண்டி போடலாமே' என்றான் பன்னீர்செல்வம் - மூன்று நண்பர்களுள் ஒருவன்.

'ஆயில் டேங்கர் போடலாம். ஹார்பர் காண்ட்ராக்டும் கிடைக்கும். நல்ல காசு என்றான் வாசு.

'வங்கியில் கடன் வாங்கலாம். ஆனால் நாமும் மூன்றில் ஒரு பங்கு கட்ட வேண்டி இருக்கும்' என்றான் செந்தில்.

அவர்கள் கையில் ஏஜன்சியில் லாபமாகக் கிடைத்த தொகை இருந்தது. அத்துடன் அவரவர் வீட்டிலும் மீதப்பணத்தை ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். சில வாரங்கள் வாங்க முடிந்தது. இப்போது அது மூன்றாகிவிட்டது.

எண்ணங்களையும், வாய்ப்புகளையும் இணைக்க முயற்சி தேவை, உழைப்பு தேவை.

செந்தில் அணி இப்படி என்றால் இன்னொரு இளைஞர் வேறு மாதிரி.

♦ ♦ ♦

"பிடித்த மாதிரியான வேலை என்றால் என்ன? அதன் பொருள் எனக்கு விளங்கவில்லை" என்றேன்.

"முதலில் பார்த்த வேலையில் எனக்கும், என்னுடன் பணிபுரிந்த ஊழியருக்கும் சரிப்பட்டு வரவில்லை. ஒரு வேலையில் சம்பளம் குறைவு. அடுத்த வேலையில் என்னை பெண்டு நிமிர்த்தி விட்டார்கள். அப்புறம் சேர்ந்த வேலையில் பயண நேரம் மிக அதிகம்."

"இவையெல்லாம் எனக்கு வலுவான காரணங்களாகவே படவில்லை" என்றேன்.

அவர் என்னை வியப்போடு பார்த்தார்.

"எல்லா வேலையிலும் விதவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. முதல் வேலையில் நீங்கள்தாம் சரி செய்து கொண்டு போயிருக்கவேண்டும். சம்பளக் குறைவான வேலையில் இருந்துகொண்டே நல்ல சம்பளம் கிடைக்கக்கூடிய வேலையைத் தேடிக்கொண்டு, பிறகு பழைய வேலையை விட்டிருக்கவேண்டும். பெண்டு நிமிர்த்தினதைப் பற்றிச் சொன்னீர்கள். இது கடுமையாக உழைக்க வேண்டிய வயது. உடலில் ஆற்றலும், வேகமும் இள இரத்தமும், இளமைத் துடிப்பும் இருக்கும்போதே உழைப்பை உடம்பிலிருந்து உருவி எடுக்கவேண்டும். 50-55 வயது ஆனதும் உடம்பு ஈஸிசேர் தா என்று கேட்கும். அதன் பிறகு மூளையைப் பயன்படுத்தி, அது தரும் யோசனைகளைச் செயல்படுத்தி அவற்றை வைத்துச் சம்பாதிக்கவேண்டும். பயண நேரம் அதிகம், வேலையை விட்டேன் என்கிறீர்கள். பம்பாயில் வேலை பார்க்கும் பலர் பூனாவிலிருந்து தினமும் பயணிக்கிறார்கள் தெரியுமா? அவ்வளவு ஏன்? விழுப்புரத்திலிருந்தும், வேலூரிலிருந்தும்



2

என்னைக் காணச் சில வருடங்களுக்கு முன் ஓர் இளைஞர் வந்தார். "என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"வேலை தேடிக்கொண்டிருக்கிறேன்" என்றார்.

"என்ன படித்திருக்கிறீர்கள்?"

"எம்.எஸ்ஸி., படித்திருக்கிறேன்."

"எவ்வளவு காலமாக வேலை தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்றேன்.

"ஐந்து வருடங்களாக."

தூக்கி வாரிப்போட்டது எனக்கு.

"என்னது! ஐந்து வருடங்களாகவா வேலை கிடைக்கவில்லை?"

"ஆமாம். என் மனசுக்குப் பிடித்த மாதிரியான வேலை கிடைக்கவில்லை."

"அப்படியென்றால் சில வேலைகளில் சேர்ந்து அவ்வப்போது விட்டுவிட்டீர்கள் என்று அர்த்தமா?"

"ஆமாம்."

குடையைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு அதைக் கண்டுபிடித்த ஜான்ஹாவேஸின் நினைவுதான் முதலில் வரும்.

இன்றைக்கு நடைமுறையில் உள்ள குடையை அவர் கண்டுபிடித்தபோது அதை மக்கள் எதிர்த்தார்களாம்.

"இவன் மழைக்கும், வெயிலுக்கும் எதிரானவன். இவனைக் கொல்லுங்கள்" என்றார்களாம். இந்தச் சொல்லைக் கேட்டுக் கல்லெறிந்து கொல்ல முயன்றவர் களும் உண்டு.

சூழ்நிலையானது வெப்பத்தையும் வேண்டாத வகையில் நீரையும் நம்மீது வீசுகிறது என்றால் அதைக் காரணமாகச் சொல்லிக் கொண்டு வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கவேண்டும் என்பது இல்லை. அதைச் சமாளிக்கும் குடையைப் போல் மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டியதுதான்.

காட்டுப் பாதையில் நடக்க முடிவு செய்து விட்டால் கல்லையும், முள்ளையும்தான் மிதிக்க வேண்டிவரும். இது சூழ்நிலை. இதற்கு நல்ல மாற்று காலணி.

இப்படி எல்லா எதிர்ச் சூழ்நிலைகளுக்கும் மாற்று உண்டு. வெல்ல வழி உண்டு. சூழ்நிலைகளையே குறை சொல்லிக் கொண்டிருந்தால் தேங்கிக் கிடக்கும் குளத்தில் பாசியாகப் படர வேண்டியதுதான்.

ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஒருவர், வறுமை என்பது தன் தலைமீது விதிக்கப்பட்டுவிட்டது என்று நம்பினால் அதுவே உண்மையாகிவிடும்.

தினமும் சென்னைக்கு வேலைக்கு வருகிறவர்கள் உண்டு தெரியுமா? ஆக மொத்தத்தில் வேலை செய்யவேண்டும்; சம்பாதிக்க வேண்டும் என்கிற எண்ணம் உங்களுக்கு வலுவாக இல்லை. இதனால் காரணங்களைத் தேடித் தேடிக் கண்டுபிடிக்கிறீர்கள். வேலைகளில் உள்ள அசௌகரியங்களைப் பெரிதுபடுத்திப் பார்ப்பதை விட்டுவிட்டு வேலை செய்வதன் இனிய பக்கங்களைப் பெரிதுபடுத்திப் பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள். 29 வயது ஆகிறது. இன்னும் எவ்வளவு நாட்களுக்குக் காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? நெட்டையோ, குட்டையோ ஒரு வேலையில் சேர்ந்து அனுபவத்தைக் கைப்பற்றுங்கள். நான்கு காசு சம்பாதிக்கிறோம் என்கிற சந்தோஷத்தை அடையுங்கள்; குடும்பத்திற்குப் பாரமாக இல்லாமல் உதவியாக இருக்கிறோம் என்று திருப்தியடையுங்கள். இந்தக் கோணங்களில் சிந்தித்தால்தான் வேலையில் நிலைக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெறும். இல்லாவிட்டால் உங்கள் வாழ்க்கையே வீணாகிவிடும். திருமண மார்க்கெட்டில் வேறு இருக்கிறீர்கள்" என்று ஒரு பிடி பிடித்து அனுப்பினேன். மனமாற்றம் பெற்று விட்டதைப் போலத்தான் முகம் சொன்னது.

நம் எண்ணங்களில் வலிமை இருந்தால் அது சூழ்நிலையை மாற்றி அமைக்கும்; வெற்றியும் கொள்ளும். மனிதர்கள் சூழ்நிலையைப் பெரிதுபடுத்திப் பேசிவந்தால் எண்ணங்களில் வலிமை இல்லை என்பது பொருள். எண்ணங்கள் வலிமையாக இருந்தால் சூழ்நிலைகளைச் சாதகமாக்கிக் கொள்வது பெரிய விஷயமல்ல.

'ஆசையிருக்கு நிர்வாகம் பண்ண; பவுசிருக்கு கழுதை மேய்க்க' என்கிற பழமொழியைத் தூக்கி எறியுங்கள்.

ஆசையிருக்கு அல்லவா? அது உண்மையில் இருக்கிறது அல்லவா? அப்படியானால் அதுவே பவுசைக் கொண்டுவரும். இது உண்மை. நம்புங்கள்.

மெல்ல அந்த எண்ணங்களுக்கு வலிமையூட்டுங்கள். வீரியமற்று இருக்கும் அந்த எண்ணத்திற்கு வீரியம் சேருங்கள். அப்புறம் பாருங்கள் என்ன மாயம் நடக்கிறது என்று!

அழுத்தமற்ற எண்ணங்கள் மேகங்கள் மாதிரி. வரும் போகும், கலையும் மறையும். ராத்திரி கண்ட கனவை காலையில் மறந்து போகிறோமில்லையா அப்படி மறந்து போகும். சில கனவுகள் மட்டும் நெடுநாளைக்கு மனதில் இடம்பிடித்துக் கொள்ளும். எண்ணங்களிலும் சில அடிமனதில் ஆசனம் போட்டு அமர்ந்து கொண்டுவிடும். 'நான் இருக்கிறேன், என்னை கவனியேன்' என்று அடிக்கடி நினைவூட்டும். ஒன்று நாம் நினைத்துக் கொண்டே இருப்போம் அல்லது அது நினைக்கத் தூண்டும். எப்படியோ அது எந்நேரமும் நம்மோடு உடனிருக்கும். அதற்கொரு முக்கியத்துவம் இருப்பதால்தானே அப்படி.

எழுத்தாளரின் எண்ணத்தில் கதைக்கான 'கரு'க்கள் பலநூறு அணிவகுக்கும். ஆனால் ஒன்றிரண்டு மட்டுமே எழுத்து வடிவம் பெறும். காரணம் கருக் கொள்வ தெல்லாம் உருக்கொள்வதில்லை. தகுதியானது மட்டுமே உருக்கொள்ளும்.

அதே மனிதர் நம்மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை நான் மாற்றுவேன் என்கிற எண்ணத்தை வலுப்படுத்திக் கொண்டால், அதன்படி நடக்கும்.

உலகின் மிகப் பெரிய கட்டடம் இன்று கோலாலம்பூரில் இருக்கிறது. இந்த மகத்தான கட்டடத்தின் அருகே நின்று பார்த்தால் கழுத்து வலி வருவது உறுதி. இதன் பிரம்மாண்டத்தையும் கட்டட நுணுக்கங்களையும், அழகையும் பாராட்டிப் பேசும் பலர், ஒன்றை மட்டும் எண்ணத் தவறி விடுகிறார்கள்.

அது, இந்த மகத்தான கட்டடம் ஒரு தனி மனிதனின் சாதாரண மனதில் தோன்றிய சிறு எண்ணமாகும்.

உலகின் மிகப் பெரிய கட்டடம் 'எம்பயர் ஸ்டேட்' கட்டடமாகும். அதைவிடவும் உயரமான கட்டடம் ஒன்றைக் கட்ட வேண்டும் என்று ஒரு மனிதனின் மனதில் எழுந்த அந்த எண்ணம்தான் எத்தனையோ பேரின் உழைப்பை, முதலீட்டை - ஏன் - பாராட்டையுமே பெற்றிருக்கிறது.

வெறும் எண்ணம் மட்டும் இருந்து என்ன பயன்? என்கிற பெரிய கம்பை குறுக்கே நீட்டி இந்த ஓட்டத்தைத் தடுத்து விடாதீர்கள்.

முதலில் எண்ணம்தான் அனைத்துச் செயலாக்கங் களுக்கும் மகத்தான சாதனைகளுக்கும் காரணம் என்பதை நம்பத் தொடங்குங்கள். செயல்வடிவம் கொடுப்பது எப்படி; அதில் வெற்றியடைவது எப்படி என்பதுபற்றி யெல்லாம் அடுத்த கட்டமாகப் பார்ப்போம்.

தடகள வீரர்கள் ஒரேநேரத்தில் பல எண்ணங்கள் படைப்பதில்லை. இன்று மாவட்ட அளவில், நாளை மாநில அளவில், மறுநாள் தேசிய அளவில் வெற்றிபெற வேண்டும் என்றே எண்ணமிடுகிறார்கள். ஒவ்வொன்றாக வெற்றிகளைக் கைப்பற்றுகிறார்கள். ஒரு சிலருக்கு ஒலிம்பிக் பதக்கம் வெல்லும் உத்தேசம் இருக்கும்.

நீங்கள் - வாழ்க்கையில் எந்தத் துறையைச் சேர்ந்த வராக வேண்டுமானாலும் இருங்கள். இந்த நேரத்திற்கு இதுதான் என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். உங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்துங்கள். அப்போதுதான் நீங்கள் கொண்ட எண்ணம் கூர்மைபெறும், வலிமை பெறும். ஒரு நல்ல வடிவம் கிடைக்கும்.

தூண்டில் போடுகிறவருக்கு மிதவை மீது கண். துப்பாக்கிப் போட்டியில் பங்கு பெறுகிறவருக்கு இலக்கின் மீது கண். வாழ்க்கையில் வெற்றிகளைக் குவிக்க எண்ணும் நீங்கள் உங்களுடைய எண்ணத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு எண்ணத்தை மீண்டும் மீண்டும் அலசி ஆராய்கிறபோது அதிலுள்ள குறைகள் நீக்கம் பெற்று, முழுமையுறுகிறது.

நாம் திரும்பத் திரும்ப எண்ணும்போது அந்த எண்ணம் வலிமை அடைகிறது.

ஒரு தீவிர உணர்வு நமக்குள் தாக்கம் பெற்றுவிடும், 'எப்படியும் செய்தே முடிப்பது' என்ற உணர்வு.

நாம் கொண்ட எண்ணத்துக்கேற்ப அதைச் செய்து முடிக்கிற ஆற்றலும் நமக்குள் பன்மடங்காய்ப் பெருகும். அதுவே - எண்ணத்தின் வலிமை செய்கிற 'மாஜிக்'!

மகத்தான எண்ணங்கள் எப்போது தோன்றும் என்று சொல்ல முடியாது. தள்ளு வண்டியில் பழம் விற்கிறவர் கவிதை எழுதுவார், இரயில்வேயில் கடைநிலை ஊழியராக இருந்து கொண்டு இன்னொருவர் கதை எழுதுவார். இன்றையத் திரையுலக பிரும்மாக்களில் சிலருக்கு கிராமம் பூர்வீகம், பூர்வீகத்தில் வறுமையுடன் சகவாசம். ஆனாலும், அவர்களுக்குள் இருந்த ஒரு சின்னப்பொறி பெரிய ஒளியாகி அவர்களைப் பிரகாசிக்க வைத்திருக்கிறது.

விருப்பத்துக்கும் வேட்கைக்கும் வித்தியாசம் உண்டு. விருப்பம் வேட்கையாகிறபோது (பெருவிருப்பம்) தான் எண்ணம் வெல்கிறது.

♦ ♦ ♦